உ

கடவுள் துணை.

சிதம்பரம்

நடராஜர்பேரில் பதிகம்.



சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.
1922.

உ

சிவமயம்.

சிதம்பரம்

நடராஜர்பேரில் பதிகம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

சீர்மலத்தேன்பொழியும் தில்லைநடராஜர்தம்மேற்
சீரார்புகழும் செந்தமிழைப்பாடுதற்கு—தார்புனையும்
ஷண்முகர்க்குமுன்னுகத் தந்திமுகத்தெந்தைபதம்
வண்மைபெறவாழ்த்துக வென்வாய்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பூரணமிகுங்கிரண பருதியெனவொளிபெறவு பொன்மகுடமுடியினழகும், புகலரியயிருசெவியில் நவமணிக்குழைகளும் பொறுகண்ட சாதினழகும், காரணமதாகவரு சிஷ்டிலயகா

ர்க்குமுன் கருணைகடை விழியினழகும், கஸ்தூரிதிலகமும் வெண்ணீருமுன்னிய கமலவதனத்தினழகும், வாரணமதுரி யாடை திருமேனிப்போர்வையும் வச்சிரமணி பாதகுறடும், வரி சைபெறபொளனிவா கொலுசிலம்பதிரவெகு வடிவுள்ளநடை யினழகும், ஆரணமுதற்பொருள் தாய்நின்றவுன்பெருமை யடி யனால் பகரவெளிதோ, அன்பருளவாசனே உம்பர்பணிஈசனே ஆனந்த நடராஜனே. 1

விண்டலத்தோர்கூட வேதகீதம்பாட விரித்தசெஞ்சடை யுமாட, விடையாடயிடையாட கையிற்கண்கணமாட விரிகுல காமுமாட, கண்டமதில்ருத்திராக்ஷத் தாழ்வடமுமாட கங்கை யணி வேணியாட, தந்தமிகுமல்லிகை மலராமவிரிமார்ரால் கன கமணிஊசலாட, வெண்டநளமணியாட வேதவேதியர்நாட விரலறியுமயனுமாட, மேனகைஅரம்பையொடு ஊர்வசிதிலோ த்தமை வெண்சாமரங்களாட, அண்டர்தொழநின்றுடு மூண்ட கப்பாதனே அடியேனற்கருளவருவாய், அன்பருளவாசனே உம்பர்பணிஈசனே ஆனந்தநடராஜனே. 2

சிவசிவாவென்றநின் திருநாமமந்திரம் சிந்தைதனிலென் றமறியேன், சிற்பராபரமாமூ தற்பராயோகதக சிவநிஷ்டை யேதுமறியேன், தவமோங்குபத்தரின தரிசனங்கண்டிலேன் சற்சனர்களுறவுமறியேன், தலமதாய்மகிமையுறு சன்னதிதனி த்சென்று சரணங்கள் செய்துமறியேன், குவலயந்தன்னில்வ

வர் மானிடப்பிறவிதனிற் கொடியனுகியனுபினேன், குலைக ளவுகட்காம மிவையெல்லாம்நிறைபெருகக் குடிகொண்டவம் பனேனை, அவசியம்உனதுதிருக் கண்பார்த்தாக்ஷியும் அன்னை லேயமுதவடிவே, அன்பருடவாசனே உம்பர்பணிஈசனே ஆன ந்தநடராஜனே. 3

நீதுநலமிதுவென்று சிந்தையுள்ளுணராத சீரிலாநன்பரு றவும், தீயோர்கள்தரிசனமும் அய்யமறமேலிட்ட ஜெகமாய் கைமூழ்கியானும், கோதிலாவாகமபுராணநெறியறியாத குரு டனுயனேகவிதமாய், குற்றங்களெத்தனை செய்திருந்தாலுமுன் குழந்தையென்றெண்ணமலென், மீதுமனவர்மங்கள் வைத்தி ருந்தாலிந்த மேதினியிற்புகழதாமோ, வேண்டாமிவ்வேளைத னில் ஆண்டவாவேண்டினேன் இவ்வினையகலவேணுமையா, ஆதரவினின்னைவிட திக்கெனக்கிலமதி லாருளாரமலநாதா, அன்பருளவாசனே உம்பர்பணிஈசனே ஆனந்தநடராஜனே. 4

மாயாவிசாரமது ஓயாமலோங்கிவளர் மானிலந்தன்னிலடி யவன், மாவினைகள்ப்வருன்றும் பாவங்கள்வெகுகோடி மதியா துசெய்தனன்யான், போய்த்திரிந்துநின் திருவடியைவிட்டுயிம் பேருலகிலாசைதொட்டு, பித்தனுயனேகவகை குற்றங்கள்செ ய்துவரும் பிழையெலாமகற்றிடாமல், சேயனுனென்மீது வர் மம்சாதிக்கலால் சிறுவனுன்சகிக்கவசமோ, தேசமெல்லாம்புகழு மாசற்றரூபனே தேஜோமயானந்தனே, ஆயுமப்புகழ்தில்லை

அம்பலத்தரசனே அடிநடுவுமுடிவானவா, அன்பருளவாசனே
உம்பர்பணிஈசனே ஆனந்தநடராஜனே. 5

சஞ்சலமிருந்துறவு பாழ்படுக்குடியதாம் தையலர்கள்யோ
னியழறில், தள்ளுண்டுளன்றுமே தயங்கிமிகவாடிடும் தமிய
னேனுதலாலென், வஞ்சமுறுமனதிருளை மாற்றவனுபானு
வென மாமகிமையுற்றவனது, மணிமந்திரவாளினால் வசைகள்
வறுத்தெனது வல்வினையைநீக்கியருள்வாய், கஞ்சமலரடிதனை
யென்னுளுமர்ச்சிக்க கருணைதரயிது தருணமே, காலகாலகண்
டா நீலகண்டாசிவ கங்காதரக்கடவுளே, அஞ்சலென்றுன்பதம்
நம்பினேனெப்பொழுதும் அடியேனையாளவருவாய், அன்பரு
ளவாசனே உம்பர்பணிஈசனே ஆனந்தநடராஜனே. 6

பெருகுந்தி டெழுகுமிழி டெனவுருகு செல்வமும் பெரு
மைபெருமகமுமிக்க, பெற்றதாய்தந்தையர்கள்பெண்டிருமக்க
ளும் பேருறவுசுற்றங்களும், கருதரியநிறைகளும் இதுவெலாங்
கனவினிற் கண்டிடும்காக்ஷியன்றோ, காயநிலையென்றிடவு
மொண்ணுதலைக்கணம் கருதிடவுமெய்யல்லவே, மருவுமல்லி
கைமுல்லை செண்பகம்மலர்புனையும் மங்கைமகிழ் நின்றநேயா,
மாறாதபவபிணியில் தீராதகவலையுறும் வாதினையைமாற்றியரு
ள்வாய், அருகுடன்றோனையும் தம்பமலாணிகின்ற அமல
னேயென்னையாளும், அனபருளவாசனே உம்பர்பணிஈசனே
ஆனந்தநடராஜனே. 7

பொங்குமதயானையா லிடலுற்றவம்பரைப் புகழ்பெறபாதகாத்தீர், பூவுலகிலுனனன்பர்யெவர்களையுமுன்னுளிற் பொருந்தவேகாக்கவிலையா, அந்தகஜனகனைதொட நுதல்விருதிரக்தெறித் தவர்க்கருள்புரியவிலையா, அந்தமுப்புரமெறிய நகைசெல்யவண்டமொடு யாளிகளுமதிரவிலையா, பங்கப்பேர்கொள்ளாம லிங்கனம்வந்தெனைப் பாலிப்பதெனனமலையா, பாராதிருப்பதவும் யார்செய்தபோதினையோபாலனுக்கதுசொல்லையா, ஐங்கரனுமறுமுமனும் செங்கணிக்காகவலம் அருகில்வரும்பரமசிவனே, அனபருளவாசனே உம்பரபணிஈசனே ஆனந்தநடராஜனே. 8

தில்லை நடராஜர்பேரில் பதிகம்

முற்றிற்று.